## மதுரை மாநகர் மாவட்டம்

**கோ.புதூர், நரிமேடு, செல்லூர், கோரிப்பாளையம், கே.கே.நகர், அண்ணாநகர், நெல்பேட்டை, தெப்பக்குளம், காமராஜபுரம், தெற்குவாசல், வில்லாபுரம், ஆரப்பாளையம், தத்தநேரி, சிம்மக்கல் ஆகிய பகுதிகளில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் - பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம் மற்றும் காமராஜபுரம் பகுதி - வட்டங்கள் 48, 48அ, தெப்பக்குளம் பகுதி - வட்டங்கள் 42, 42அ, 41அ, தெற்குவாசல் பகுதி - வட்டங்கள் 47, 47அ, 53, 53அ ஆகிய வட்டங்களில் அடங்கியுள்ள வாக்குச்சாவடி எண்கள் - வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்**

### தலைமைக் கழகம் அறிவிப்பு

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் அமைத்த "தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு" ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் மதுரை மாநகர் மாவட்டத்தில் உள்ள கோரிப்பாளையம், கே. கே. நகர் பகுதிக்குட்பட்ட வார்டுகள் இணைத்து மறுசீரமைக்கப் படுகின்றன. கோ.புதூர், செல்லூர், கோரிப்பாளையம் ஆகியவை இணைத்து நான்கு பகுதியாகவும், மதுரை தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அவனியாபுரம் கிழக்கு, நெல்பேட்டை, காமராஜபுரம் ஆகியவை இணைத்து 4 பகுதியாகவும், ஆரப்பாளையம் பகுதி இரண்டாகவும், பிரிக்கப்பட்டு புதிய கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட பகுதிகள் பின்வரும் வார்டுகளை கொண்டதாக அமையும்.

**கோ.புதூர் பகுதி :**10, 12, 14 ஆகிய 3 வார்டுகள்

**நரிமேடு பகுதி** :15, 16, 26 ஆகிய 3 வார்டுகள்

**செல்லூர் பகுதி :**23, 24, 25 ஆகிய 3 வார்டுகள்.

**கோரிப்பாளையம் பகுதி :**27, 28, 32 ஆகிய 3 வார்டுகள்

**கே.கே.நகர் பகுதி :**31, 33, 34, 35 ஆகிய 4 வார்டுகள்

**அண்ணாநகர் பகுதி :**36, 37, 39 ஆகிய 3 வார்டுகள்

**நெல்பேட்டை பகுதி :**29, 30, 49 ஆகிய 3 வார்டுகள்

**தெப்பக்குளம் பகுதி :**42, 42அ, 43, 41அ (அவனியாபுரம் பகுதி, மதுரை தெற்கு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்டது) ஆகிய 4 வார்டுகள்

**காமராஜபுரம் பகுதி :**44, 46, 48, 48அ ஆகிய 4 வார்டுகள்

**தெற்குவாசல் பகுதி :**47, 47அ, 53, 53அ, 85 ஆகிய 5 வார்டுகள்

**வில்லாபுரம் பகுதி :**45, 86, 88 ஆகிய 3 வார்டுகள்.

**ஆரப்பாளையம் பகுதி :**57, 58 ஆகிய 2 வார்டுகள்

**தத்தநேரி பகுதி :**21, 22 ஆகிய 2 வார்டுகள்

**சிம்மக்கல் பகுதி :**50, 51, 55, 56 ஆகிய 4 வார்டுகள்

#### பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு அமையப் பெற்ற கோ.புதூர், நரிமேடு, செல்லூர், கோரிப்பாளையம், கே.கே.நகர், அண்ணாநகர், நெல்பேட்டை, தெப்பக்குளம், காமராஜபுரம், தெற்குவாசல், வில்லாபுரம், ஆரப்பாளையம், தத்தநேரி, சிம்மக்கல் ஆகிய பகுதிக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கோ.புதூர் பகுதி :** பொறுப்பாளர் : என்.எம்.புண்ணியமூர்த்தி

**நரிமேடு பகுதி :** பொறுப்பாளர் : அ. சரவணன்

**செல்லூர் பகுதி :** பொறுப்பாளர் : டி.எ.குரும்பன்

**கோரிப்பாளையம் பகுதி :** பொறுப்பாளர் : ஜி.ராதாகிருஷ்ணன்

**கே.கே.நகர் பகுதி :** பொறுப்பாளர் : பி.அறிவுநிதி

**அண்ணாநகர் பகுதி :** பொறுப்பாளர் : எஸ்.சித்திக்

**நெல்பேட்டை பகுதி :** பொறுப்பாளர் : அ.அன்வர்உசேன்

**தெப்பக்குளம் பகுதி :** பொறுப்பாளர் : எம்.மா.முகேஷ்சர்மா

**காமராஜபுரம் பகுதி :** பொறுப்பாளர் : ஆர்.எம்.முத்து

**தெற்குவாசல் பகுதி :** பொறுப்பாளர் : ப.ரமேஷ்குமார் (எ) ஜீவன்

**வில்லாபுரம் பகுதி :** பொறுப்பாளர் : போஸ் முத்தையா

**ஆரப்பாளையம் பகுதி :** பொறுப்பாளர் : எஸ்.எஸ்.மாறன் (எ) மாறவர்மன்

**தத்தநேரி பகுதி :** பொறுப்பாளர் : நீலமேகம்

**சிம்மக்கல் பகுதி :** பொறுப்பாளர் : எம். சரவணபாண்டியன்

#### பகுதிக்குட்பட்ட வட்டங்கள் பிரிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் மதுரை மாநகர் மாவட்டத்தில் உள்ள தெப்பக்குளம் பகுதியில் உள்ள 42 வது பகுதி வட்டம் இரண்டாகவும், காமராஜபுரம் பகுதியில் உள்ள 48 வது பகுதி வட்டம் இரண்டாகவும்; அவனியாபுரம் கிழக்கு பகுதியில் உள்ள 41 வது வட்டத்தில் உள்ள மதுரை தெற்கு தொகுதிக்கு உட்பட்ட 5 வாக்குச்சாவடிகள் கொண்டு 41 அ வட்டமும்; தெற்குவாசல் பகுதியில் உள்ள 47 மற்றும் 53 ஆகிய இரண்டு வட்டங்கள் 47, 47-அ மற்றும் 53, 53-அ என நான்கு வட்டங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட வட்டங்களுக்கு புதிய கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட வட்டங்கள் பின்வரும் வாக்குச்சாவடிகளைக் கொண்டதாக அமையும்.

**காமராஜபுரம் பகுதி**

வட்டம் 48 : வாக்குச்சாவடிகள்: 175, 176, 179, 180, 181, 182, 183, 184, 185

வட்டம் 48-அ : வாக்குச்சாவடிகள்: 30, 31, 68, 69, 70, 71, 72, 177.

**தெப்பக்குளம் பகுதி**

வட்டம் 42 : வாக்குச்சாவடிகள் : 32, 33, 34, 36, 37, 38, 39, 202

வட்டம் 42-அ : வாக்குச்சாவடிகள்: 205, 206, 209, 210, 211, 212, 213, 214, 215.

வட்டம் 41-அ : மதுரை தெற்கு மாவட்டம் அவனியாபுரம் கிழக்கு பகுதியில் 41 வது வட்டத்தில் உள்ள மதுரை தெற்கு தொகுதிக்கு உட்பட்ட 199, 200, 201 ,203, 204 ஆகிய வாக்குச்சாவடிகள் 41 அ வட்டமாக பிரிக்கப்பட்டு தெப்பக்குளம் பகுதியில் இணைக்கப்படுகிறது. மீதமுள்ள திருப்பறங்குன்றம் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடிகள் 41 வது வட்டமாக அவனியாபுரம் கிழக்கு பகுதியில் தொடர்ந்து செயல்படும்.

**தெற்குவாசல் பகுதி**

வட்டம் 47 : வாக்குச்சாவடிகள்: 78, 83, 84, 87, 88, 90, 91, 99, 110

வட்டம் 47-அ : வாக்குச்சாவடிகள்: 75, 76, 77, 79, 80, 81, 82, 89, 98

வட்டம் 53 : வாக்குச்சாவடிகள்: 101, 102, 103, 105, 106, 107, 108, 109

வட்டம் 53-அ : வாக்குச்சாவடிகள்: 92, 93, 94, 95, 96, 97, 100, 104, 111.

#### வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **காமராஜபுரம் பகுதிக்குட்பட்ட வட்டங்கள் 48, 48அ - தெப்பக்குளம் பகுதிக்குட்பட்ட வட்டங்கள் 42, 42அ, 41அ - தெற்குவாசல் பகுதிக்குட்பட்ட வட்டங்கள் 47, 47அ, 53, 53அ** ஆகிய வட்டக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**காமராஜபுரம் பகுதி**

வட்டம் 48 பொறுப்பாளர் : பி.சுரேஷ்பாலாஜி

வட்டம் 48-அ பொறுப்பாளர் : எஸ். கணேசமுருகன்

**தெப்பக்குளம் பகுதி**

வட்டம் 42 : பொறுப்பாளர் : என். ஆங்கன்

வட்டம் 42-அ : பொறுப்பாளர் : ஆர்.பி.முத்துப்பாண்டி

வட்டம் 41-அ : பொறுப்பாளர் : பி. மலைச்சாமி

**தெற்குவாசல் பகுதி**

வட்டம் 47 : பொறுப்பாளர் : கே.கே.காதர்பக்கீர்

வட்டம் 47-அ : பொறுப்பாளர் : ஆர்.எம்.கிருஷ்ணன்

வட்டம் 53 : பொறுப்பாளர் : ஜே. கார்த்திக்

வட்டம் 53-அ : பொறுப்பாளர் : எஸ்.முகமது இஸ்மாயில்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி கே.அலாவுதீன் தலைமையில்

## ஏழாவது மாநில நிதி ஆணையம்!

### தமிழ்நாடு அரசு ஆணை!

**சென்னை, மே 30 -**

**தமிழ்நாடு அரசு ஏழாவது மாநில நிதி ஆணையம் அமைத்து உத்தரவு வெளியிட்டுள்ளது. ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி கே.அலாவுதீன் தலைமையில் அமைக்கப்பட்ட இந்த ஆணையத்தில், அலுவல் சாரா உறுப்பினர்கள் மூவரும், உறுப்பினர் செயலர் ஒருவரும் உள்ளார்.**

*இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-*

*தமிழ்நாடு அரசு ஏழாவது மாநில நிதி ஆணையத்தினை அமைத்து ஆணையிட்டுள்ளது. இந்த ஆணையமானது பல்வேறு நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமை குறித்து ஆய்வு செய்து மாநில அரசு வழங்கிட வேண்டிய நிதிப் பகிர்வு குறித்து உரிய பரிந்துரைகளை வழங்கிடும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வகுக்கப்பட்ட வகையில், தமிழ்நாடு அரசு அமைத்துள்ள இந்த ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் பின்வருமாறு நியமித்து ஆணையிட்டுள்ளது:*

*(1) தலைவர் : கே.அலாவுதீன், இ.ஆ.ப. (ஓய்வு),*

*(2) அலுவல் சாரா உறுப்பினர் :என்.தினேஷ்குமார், மேயர், திருப்பூர் மாநகராட்சி*

*(3) உறுப்பினர் (அலுவல் வழி) : நகராட்சி நிர்வாக இயக்குநர்*

*(4) உறுப்பினர் (அலுவல் வழி) : ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்*

*(5) உறுப்பினர் (அலுவல் வழி) : பேரூராட்சிகளின் ஆணையர்*

*(6) உறுப்பினர்செயலர் : பிரத்திக் தாயள், இ.ஆ.ப., அரசு துணைச் செயலாளர் (வரவுசெலவு) (முழு கூடுதல் பொறுப்பு), நிதித் துறை.*

*இந்த ஆணையம், ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின், அதாவது கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், மாவட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றின் நிதி நிலையை ஆய்வு செய்து, பிற இனங்களுடன் பின்வருபவை குறித்து பரிந்துரை செய்யும்:*

*i. மாநில அரசு விதிக்கத்தக்க வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றின் நிகர வருவாயினை மாநில அரசுக்கும் ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இடையே பகிர்ந்து கொள்ளுதல், அத்தகைய வருவாயில் மேற்குறிப்பிட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே அவற்றிற்குரிய பங்குகளை முறையே பிரித்தளித்தல்;*

*ii. ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படக்கூடிய அல்லது அவைகளே தக்கவைத்துக் கொள்ளக்கூடிய வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றைத் தீர்மானித்தல்; மற்றும்*

*iii. மாநில அரசின் தொகுப்பு நிதியிலிருந்து மேற்குறிப்பிட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவி மானியங்கள்;*

*2027 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தொடங்கும் ஐந்தாண்டுகளுக்கு பொருந்தும் வகையில், இந்த ஆணையம், 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31 ஆம் தேதிக்குள் தனது அறிக்கையை தமிழ்நாடு அரசுக்கு அளித்திடும்.*

---

## அரசு பெண் ஊழியர்கள் மகப்பேறு விடுப்பு!

### அரசாணை வெளியீடு!

*சென்னை,மே.30-*

*தமிழ்நாடு அரசு பெண் ஊழியர்களின் ஓராண்டு மகப்பேறு விடுப்புக் காலம், தகுதி காண் பருவத்தில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்று தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.*

*இந்த அறிவிப்பின் மூலம் மகப்பேறு விடுப்புக் காலத்தால், அரசு பெண் பணியாளர்களின் பதவி தமிழ்நாடு பணி மூப்போ பாதிக்கப்படாது.*

*தமிழக சட்டப்பேரவையில் ஏப்ரல் 28 ஆம் தேதியில் நடைபெற்ற 2025 2026 மானியக் கோரிக்கையின்போது முதல்வர் மு.க.ஸ்டாலின், திருமணமான அரசு பெண் பணியாளர்களுக்கு 9 மாதங்களாக இருந்த மகப்பேறு விடுப்புக் காலம், 2021, ஜுலை மாதம் முதல் தேதியில் இருந்து ஓராண்டாக உயர்த்தப்பட்டது.*

*தற்போதைய விதிகளின்படி, மகப்பேறு விடுப்புக் காலம், தகுதிகாண் பருவத்துக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.*

*இதனால், தகுதிகாண் பருவத்தை உரிய காலத்தில் முடிக்க இயலாமல், அவர்களுடைய பதவி உயர்வு பாதிக்கப்படுவதுடன், பணி மூப்பினையும் பல்லாயிரக்கணக்கான இளம்மகளிர் அரசுப் பணியாளர்கள் இழக்கும் நிலை ஏற்படுகிறது.*

*இனிவரும் காலங்களில், அரசுப் பெண் பணியாளர்களின் மகப்பேறு விடுப்புக் காலத்தினை அவர்களது தகுதி காண் பருவத்துக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்று அறிவித்தார்.*

---

### நாமக்கல் கிழக்கு மாவட்டம் –

## இராசிபுரம், பிள்ளாநல்லூரில் இளைஞர் அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பங்கள்!

### சுப்பிரமணியம் தலைமையில் – மா.கார்த்திக் பெற்றுக் கொண்டார்!

நாமக்கல், மே 30 -

நாமக்கல் கிழக்கு மாவட்டம் பிள்ளாநல்லூர் பேரூர் திமுக இளைஞரணி சார்பாக பிள்ளாநல்லூர் பேரூராட்சியில் 15 வார்டுகளுக்கு உட்பட்ட வார்டு இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பம் அளித்த 45 நபர்களையும் பேரூர் செயலாளர் சுப்ரமணி யம் தலைமையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மா.கார்த்திக் சந்தித்து விண்ணப்பங்களை பெற்று கொண்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கண்ணன், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் சுரேஷ், பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நித்தியா னந்தம், மாரிமுத்து, இளையராஜா, தீபன் சக்கரவர்த்தி உட்பட வார்டு கழகச் செயலாளர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பி னர்கள், வார்டு இளைஞரணி நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதேபோல் இராசிபுரம் நகர திமுக இளைஞரணி சார்பாக இராசிபுரம் நகரத்தில் 27 வார்டுக்கு உட்பட்ட வார்டு இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பங்கள் அளித்த 108 நபர்களையும் மாவட்ட பொருளாளரும் இராசிபுரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான ஏ. கே.பாலச்சந்தர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மா.கார்த்திக் ஆகியோர் சந்தித்து விண்ணப்பங்களை பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் நகர பொருளாளர் அன்சர், நகர இளைஞரணி அமைப்பாளர் யோகராஜன் மற்றும் நகர இளைஞ ரணி துணை அமைப்பாளர்கள் பாண்டியன், லவக்குமார், மணிகண்டன், தினேஷ், தன்ராஜ், ராஜேஷ்,ரகுபதி, ரியாஸ் உட்பட வார்டு இளைஞரணி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரம் நகரம் மற்றும் பிள்ளாநல்லூர் பேரூரில் வார்டு இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பம் அளித்த 150 நபர்களையும் மாவட்ட பொருளாளரும் இராசிபுரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான ஏ.கே.பாலச்சந்தர், பேரூர் செயலாளர் அ. சுப்ரமணியம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்

மா.கார்த்திக் ஆகியோர் விண்ணப்பங்களை பெற்று கொண்டனர். இந்நிகழ்ச்சியில் நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

## கோவை தெற்கு மாவட்டம்

**சூலூர் தெற்கு, சூலூர் வடக்கு, சூலூர் மேற்கு - மதுக்கரை மேற்கு, மதுக்கரை கிழக்கு - கிணத்துக்கடவு மேற்கு, கிணத்துக்கடவு தெற்கு, கிணத்துக்கடவு வடக்கு, கிணத்துக்கடவு மத்திய ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம் மற்றும் பொள்ளாச்சி தெற்கு, பொள்ளாச்சி வடக்கு ஆகிய நகரங்களிலும் - குறிச்சி தெற்கு, குறிச்சி வடக்கு, குறிச்சி மேற்கு ஆகிய பகுதிகளிலும் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் நகர, பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!**

### தலைமைக் கழகம் அறிவிப்பு

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **"தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு"** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கோயம்புத்தூர் தெற்கு மாவட்டத்தில் உள்ள சூலூர் தெற்கு, வடக்கு மூன்று ஒன்றியங்களாகவும் மதுக்கரை ஒன்றியம் இரண்டு ஒன்றியங்களாகவும் கிணத்துக்கடவு தெற்கு, வடக்கு, மேற்கு ஆகிய மூன்று ஒன்றியங்கள் நான்கு ஒன்றியங்களாகவும்,பொள்ளாச்சி நகரம் இரண்டு நகரங்களாகவும் குறிச்சி தெற்கு, வடக்கு மூன்று பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டு புதிய கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாகவும் நகராட்சி மற்றும் பகுதி பின்வரும் வார்டுகளை கொண்டதாகவும் அமையும்.

**சூலூர் தெற்கு ஒன்றியம் :**1.காடம்பாடி, 2.கலங்கல், 3.காங்கேயம்பாளையம், 4.பட்டணம், 5.பீடம்பள்ளி ஆகிய 5 ஊராட்சிகள் மற்றும் பள்ளபாளையம், கண்ணம்பாளையம், சூலூர், இருகூர் ஆகிய 4 பேரூர்கள்.

**சூலூர் வடக்கு ஒன்றியம் :1.** பதுவம்பள்ளி, 2. காடு வெட்டிப்பாளையம், 3. கிட்டாம்பாளையம், 4. செம்மாண்டாம் பாளையம்,5. கரவளிமாதப்பூர், 6. ராசிப்பாளையம், 7. கணியூர் ஆகிய 7 ஊராட்சிகள் மற்றும் சாமளாபுரம், மோப்பிரிபாளையம் ஆகிய 2 பேரூர்கள்.

**சூலூர் மேற்கு ஒன்றியம் :**1. அரசூர், 2. முத்துகவுண்டன்புதூர், 3.நீலம்பூர், 4. மயிலம்பட்டி, 5. சின்னியம்பாளையம் ஆகிய 5 ஊராட்சிகள்.

**மதுக்கரை மேற்கு ஒன்றியம் :**1. நாச்சிபாளையம், 2. மாவுத்தம்பதி, 3.பாலதுறை, 4. பிச்சனூர், 5. வழுக்குப்பாறை ஆகிய 5 ஊராட்சிகள் மற்றும் ஒத்தக்கால் மண்டபம், எட்டிமடை ஆகிய 2 பேரூர்கள்.

**மதுக்கரை கிழக்கு ஒன்றியம் :**1. அரிசிபாளையம், 2. மலுமிச்சம்பட்டி, 3. மயிலேறிபாளையம், 4. சீரபாளையம் ஆகிய 4 ஊராட்சிகள் மற்றும் வெள்ளலூர், செட்டிபாளையம் ஆகிய 2 பேரூர்கள்

**கிணத்துக்கடவு மேற்கு ஒன்றியம் :**1. கோடங்கிபாளையம், 2.குதிரையாலம்பாளையம், 3. நெ.10. முத்தூர், 4. பொட்டையாண்டிபுறம்பு, 5. சொக்கனூர், 6. சொலவம்பாளையம், 7. வடபுதூர் ஆகிய 7ஊராட்சிகள் மற்றும் கிணத்துக்கடவு, திருமலையாம்பாளையம் ஆகிய 2 பேரூர்கள்.

**கிணத்துக்கடவு தெற்கு ஒன்றியம் :**1. ஆண்டிபாளையம், 2.செட்டிக்காபாளையம், 3. தேவனாம்பாளையம், 4. குளத்துப்பாளையம், 5. கக்கடவு, 6. காணியாலம்பாளையம், 7. கப்பளாங்கரை, 8.நல்லட்டிபாளையம் ஆகிய 8 ஊராட்சிகள்.

**கிணத்துக்கடவு வடக்கு ஒன்றியம் :**1. காட்டம்பட்டி, 2.மன்றாம்பாளையம், 3. சிறுகளந்தை, 4. மெட்டுவாவி, 5. பனப்பட்டி, 6.காரச்சேரி, 7. அரசம்பாளையம், 8. கோதவாடி, 9. குருநல்லிபாளையம், 10. பெரிய களந்தை ஆகிய 10 ஊராட்சிகள்.

**கிணத்துக்கடவு மத்திய ஒன்றியம் :**1. கொண்டம்பட்டி, 2. வரதனூர், 3. வடசித்தூர், 4. கோவில்பாளையம், 5. முள்ளுபாடி, 6. சூலக்கல், 7. மேட்டுப்பாளையம், 8. தேவராயபுரம், 9. கோவிந்தாபுரம், 10. சோழனூர் ஆகிய 10 ஊராட்சிகள்.

#### ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **சூலூர் தெற்கு, சூலூர் வடக்கு, சூலூர் மேற்கு - மதுக்கரை மேற்கு, மதுக்கரை கிழக்கு - கிணத்துக்கடவு மேற்கு, கிணத்துக்கடவு தெற்கு, கிணத்துக்கடவு வடக்கு, கிணத்துக்கடவு மத்திய** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சூலூர் தெற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **த. மன்னவன்** கோவை மாவட்டம்.

**சூலூர் வடக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **க.செந்தில்குமார்** கோவை மாவட்டம்.

**சூலூர் மேற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **எ.வி. அன்பரசு** கோவை மாவட்டம்.

**மதுக்கரை மேற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **ஜெ. நந்தகுமார்** கோவை மாவட்டம்.

**மதுக்கரை கிழக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **ஆர். விஜயசேகரன்** கோவை மாவட்டம்.

**கிணத்துக்கடவு மேற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **கே.கே.செந்தில்குமார்** கோவை மாவட்டம்.

**கிணத்துக்கடவு தெற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **செ.ஆ.துரை** கோவை மாவட்டம்.

**கிணத்துக்கடவு வடக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **கிரி கதிர்வேல்** கோவை மாவட்டம்.

**கிணத்துக்கடவு மத்திய ஒன்றியம்**

பொறுப்பாளர் : **அப்தாப் ஹுசைன்** கோவை மாவட்டம்.

#### பொள்ளாச்சி நகரங்கள்

**பொள்ளாச்சி தெற்கு நகரம் :** 17, 18, 19, 20, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36 ஆகிய 17 வார்டுகள்.

**பொள்ளாச்சி வடக்கு நகரம் :**1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 21, 22, 23 ஆகிய 19 வார்டுகள்.

#### நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட பொள்ளாச்சி தெற்கு, பொள்ளாச்சி வடக்கு ஆகிய நகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**பொள்ளாச்சி தெற்கு நகரம்**

பொறுப்பாளர் : **அமுதபாரதி** பொள்ளாச்சி

**பொள்ளாச்சி வடக்கு நகரம்**

பொறுப்பாளர் : **நவநீதகிருஷ்ணன்** பொள்ளாச்சி

#### பகுதி கழகங்கள்

**குறிச்சி தெற்கு பகுதி :**97, 98, 100 ஆகிய 3 வார்டுகள்.

**குறிச்சி வடக்கு பகுதி :**95, 99 ஆகிய 2 வார்டுகள்.

**குறிச்சி மேற்கு பகுதி :**85, 94, 96 ஆகிய 3 வார்டுகள்.

#### பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட குறிச்சி தெற்கு, குறிச்சி வடக்கு, குறிச்சி மேற்கு ஆகிய பகுதிகளில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**குறிச்சி தெற்கு பகுதி**

பொறுப்பாளர் : **ஆர். கார்த்திகேயன்** குறிச்சி, கோவை

**குறிச்சி வடக்கு பகுதி**

பொறுப்பாளர் : **எஸ்.எ. காதர்** குறிச்சி, கோவை

**குறிச்சி மேற்கு பகுதி**

பொறுப்பாளர் : **செந்தில்குமார்** குறிச்சி, கோவை

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.